# வெஸ்டன் இந்தியாமிஷன்
# Western India Mission

செய்திமலர் அக்டோபர் - 2022


கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளுக்கு,

எல்லாவற்றிற்கும் மேலான இயேசு கிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தில் யாவருக்கும் அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஒன்பது மாதங்களைக் கடந்து பத்தாவது மாதத்தைக் காணச் செய்த தேவாதி தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். இதுவரை நம்மை நடத்தி, குறைவின்றி காத்து முடிவுபரியந்தம் நம்மை நடத்தும் தேவாதி தேவனுக்கே எல்லா மேன்மையும் மகிமையும் உண்டாவதாக.

கடந்த காலங்களில் நம்முடைய வாழ்வில் ஏற்பட்ட இக்கட்டான சூழ்நிலைகளை மாற்றிய அவருடைய கிருபையை நினைத்து அவருக்கு நன்றி செலுத்துவோம். நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்த தேவனுக்கு ஸ்தோத்திரம். சிவந்த சமுத்திரம் போன்ற பிரச்சனைகள் நம் வாழ்வில் வந்தாலும், "சிவந்த சமுத்திரத்தை இரண்டாகப் பிரித்தவரைத் துதியுங்கள; அவர் கிருபை என்றுமுள்ளது. அதின் நடுவே இஸ்ரவேலைக் கடந்துபோகப்பண்ணினவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது" (சங்.136:13,14). "அங்கங்காரிகள் எனக்குக் கண்ணியையும் கயிறுகளையும் மறைவாய் வைக்கிறார்கள்; வழியோரத்திலே வலையை விரித்து, எனக்குச் சுருக்குகளை வைக்கிறார்கள்" (சங்.140:5) என்ற சங்கீதக்காரனுடைய அனுபவங்கள் நமக்கு நேரிட்டாலும்," சிறுமையானவனின் வழக்கையும், எளியவர்களின் நியாயத்தையும் விசாரிக்கும் கர்த்தர்" (சங்.140:12 ) நம் அருகில் உண்டு என்கிற விசுவாசத்தோடே வாழ்க்கை என்னும் ஓட்டத்தை ஓட அழைக்கப்படுகிறோம். அப்படிப்பட்ட தேவன் நமது வழக்கை விசாரிக்கும்பொழுது "நானோ அதற்குத் தப்பிக் கடந்துபோவேன்" (சங்.141:10) என்ற சங்கீதக்காரனுடைய அனுபவம் நம்முடைய அனுபவமாகும். ஒருவேளை தற்காலத்தில், நமது நிலைமைகள் சீரடையாது என்ற அவிசுவாசமான



பூர்கியில் நடைபெற்ற கூடுகையில் பாரத்தோடு ஜெபிக்கும் மக்கள்

எண்ணங்கள் நம்மை மேற்கொள்ளாதவாறு தொடர்ந்து ஜெபிப்போம். ஏற்ற வேளையில், நம் தேவன் நமது வழக்கை விசாரித்து நமக்கு நீதி செய்யும் போது அவரைத் துதிக்க, மகிமைபடுத்த தேவன் நம்மை அழைக்கிறார்.

நம் தேசத்தில் சமீப நாட்களில் தற்கொலை ஆவி எங்கும் நடமாடுவது, ஏராளமான வாலிபர்கள் தங்கள் வாழ்க்கையை மாய்த்துக்கொள்வது வேதனையளிப்பதாக உள்ளது. போட்டித் தேர்வில் தோல்வி, கடன் பிரச்சனைகள், ஏற்றுக் கொள்ளப்படாத காதல் போன்ற காரியங்கள் ஏராளமான மாணவர்கள், வாலிபர்களை தற்கொலைக்கு நேராக இழுத்துச் செல்கிறது. பொதுவாக வாழ்வதைக் காட்டிலும் தற்கொலை செய்வதற்குத்தான் அதிக தைரியம் வேண்டும். தங்கள் வாழ்வினை முடித்துக்கொள்ள, மக்களின் தைரியத்தையே அவர்களுக்கு விரோதமாக பிசாசனவன் பயன்படுத்துகிறான். முடிவு, அவர்களுக்கு மாத்திரமல்ல, தற்கொலை செய்து கொண்டவனுடைய குடும்பத்தார் அனைவருக்கும் ஏற்படும் நிந்தைகள், அவமானங்கள் மற்றும் அதனால் ஏற்படும் மன உளைச்சல்கள் குடும்பத்தையே தற்கொலைக்கு நேராக இழுத்துச் செல்கிறது. இந்திய அளவில் ஒவ்வொரு 42 நிமிடத்திற்கும் ஒரு மாணவன் தற்கொலை செய்து கொள்கிறான், 2021ம் ஆண்டு மட்டும் இந்தியாவில் 1,64,033 தற்கொலைகள் நடந்துள்ளது. முதல் இடத்தில் மஹாராஷ்டிராவும் (22,207) இரண்டாம் இடத்தில் தமிழ்நாடும் (14,965) உள்ளன. பரிசுத்த ஆவியின் உன்னத பெலத்தால் தற்கொலை ஆவிகளை கட்டி ஜெபிக்க அழைக்கப்படுகிறோம். வல்லமையாய்க் கிரியை செய்யும் பரிசுத்த ஆவியானவரின் துணையால் இத்தகைய தவறான எண்ணத்தோடு மனஅழுத்தத்திற்கு உள்ளானவர்களைக் கண்டு தேவ ஆலோசனைகளைக் கூறவும் பிசாசு அவர்களை மேற்கொள்ளாதவாறு ஜெபத்தால் தாங்கவும் அழைக்கப்படுகிறோம். இத்தகைய தற்கொலை ஆவியின் போராட்டத்தில் சிக்கித்தவிக்கும் மக்கள் பரிசுத்த ஆவியின் பெலனால் விடுவிக்கப்பட தொடர்ந்து ஜெபிப்போம்.

நம்முடைய வெஸ்டன் இந்தியா மிஷன் ஸ்தாபனம் மூலமாக குஜராத், மஹாராஷ்ட்ரா மாநிலங்களில் உள்ள பணித்தளங்களில் பணிபுரியும் மிஷனெரி குடும்பங்களுக்காக, பிசாசின் கட்டுகளுக்குள் இருக்கும் ஜனங்கள் சத்தியத்தினால் விடுவிக்கப்படவும், மனந்திரும்பவும், தேவனுக்காக வைராக்கியமாக நிற்கவும், சுவிசேஷம் அவர்களுக்கு உண்மையாய் அறிவிக்கப்படவும் தொடர்ந்து ஜெபிப்போம். தேவன் தாமே அவருடைய சத்தியத்திலே முடிவுபரியந்தம் நிலைநிற்க நம் அனைவருக்கும் பெலன் தந்து வழி நடத்துவாராக. ஆமென்.



பிம்ரியில் நடைபெற்ற கூடுகையில் பங்குபெற்ற பெண்கள்

## நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்

இயேசு கிறிஸ்து மனிதனாய் இவ்வுலகில் ஊழியம் செய்தபோது ஜனங்களுக்கு போதித்துச் சொன்ன பல பிரசங்கங்கள் பரிசுத்த வேதத்தில் பதிவு பண்ணப்பட்டிருக்கிறது. அதில் மத்தேயு 5,6, மற்றும் 7ம் அதிகாரங்களில் மலை பிரசங்கத்தில், அவரை ஏற்றுக் கொண்டவர்கள் தங்கள் வாழ்க்கையில் எல்லா சூழ்நிலையிலும் தேவ நாம மகிமைக்காய் வாழ வேண்டும் என்பதையும், மற்றவர்களுக்கு முன்பாக பிதாவின் குணாதிசயங்களை வெளிப்படுத்த வேண்டுமென்பதையும் தெளிவாக போதிக்கிறார். மத் 5:16ல் "மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது" என்ற மாபெரும் கட்டளையை கொடுத்திருக்கிறார். நம்முடைய நேர்த்தியான வெளிப்புற அலங்கரிப்பு பிதாவின் மகிமையை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தாது. மாறாக, கிறிஸ்துவின் குணநலன்கள் நம்மில் வெளிப்படும் போது பிதா நம்மில் மகிமைப்படுவார். வேதத்தில் நாம் காணும் பல தேவபிள்ளைகளின் வாழ்வு பிதா மகிமைப்படும்படியாக, தேவனுடைய குணாதிசயங்களை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. அப்போஸ்தலனாகிய பவுலுடைய வாழ்க்கையில் வெளிப்பட்ட தேவனுடைய குணாதியங்களில் மூன்று குணாதிசயங்களைப் பற்றி சிந்திக்க தேவன் நமக்கு கிருபை செய்வாராக.

### 1. மற்றவர்களுக்கு ஆறுதல் செய்தல் :

"எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்" (2 கொரி 1:4) என்று பவுல் அப்போஸ்தலன் தம்முடைய வாழ்வின் அனுபவத்திலிருந்து கூறுகிறார். கிறிஸ்தவ வாழ்வு என்பது பல்வேறு பிரச்சனைகளை எதிர்நோக்கும் வாழ்வு. கிறிஸ்தவ வாழ்க்கையின் எதிரியான பிசாசானவன் பல பிரச்சனைகளை நமக்குக் கொடுத்து மற்றவர்களுக்கு ஆறுதல் செய்ய முடியாதபடிச் செய்வான். பணக்கஷ்டம், வியாதியால் வரும் பிரச்சனை, சமாதானக் குறைவு, மனநிம்மதியில்லாத சூழ்நிலை, மக்கள் நம்மைக் குறித்து தவறாக எண்ணம் கொள்வது, நம்மீது வீண்பழி சுமத்துவது போன்ற பல பிரச்சனைகளைக் கொடுத்து நம்மைச் சோர்வடையும்படி பிசாசானவன் செய்வான். யோபு போன்ற பக்தருடைய வாழ்வில் ஏற்பட்ட பல சோதனைகளைப் போன்று நம்முடைய வாழ்விலும் பிரச்சனைகளை ஏற்படுத்த பிசாசானவன் மிகவும் கவனமுடன் செயல்படுவான் "என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்-களாயிருப்பீர்கள்" (மத் 5:11) என்று இயேசு கிறிஸ்து ஜனங்களுக்குப் போதிக்கிறதைக் காண்கிறோம். இவ்விதமான துன்பங்கள் நமக்கு வரும்பொழுது ஆறுதலின் தேவனை நோக்கிப் பார்த்தால் நமக்கு ஆறுதல் செய்ய அவர் ஆயத்தமுள்ளவராயிருக்கிறார். "பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக, எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று. நாங்கள் எங்கள்மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன்மேல் நம்பிக்கையாயிருக்கத்தக்கதாக, மரணம் வருமென்று நாங்கள்

G Pay
Western India Mission
+91 98940 75795
9894075795@okbizaxis
BHIM UPI

எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம். அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களை தப்புவித்தார்" (2 கொரி 1:8,9,10) என பவுல் எழுதுவது போன்ற பிரச்சனைகள் நமக்கு நேர்ந்தாலும், தேவன் நம்மை தப்புவித்தார். ஏன் தெரியுமா? எவ்விதமான உபத்திரவத்திலும் அகப்படுகிற பிறருக்கு ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி நம்மை ஆயத்தப்படுத்துவதற்காகவே.

ஆறுதல் செய்கிற தேவனுடைய கிருபையால் பல்வேறு பிரச்சனைகிளிலிருந்து விடுதலை பெற்றுக் கொண்டவர்கள், சாட்சி கூறுவதுடன் தங்களது கடமை முடிவுபெற்றுவிடுகிறது என்ற எண்ணமுடையவர்களாயிருக்கிறோம். சாட்சி கூறுவது மட்டுமல்ல, பிரச்சனைகளில் மாட்டிக்கொண்டு, தேவன் அருளும் கிருபைகளில் நம்பிக்கையில்லாமல் வாழ்ந்து வரும் மற்றவர்களுக்கு, ஆறுதல் அளிக்கும் தெய்வம் இயேசு என்று சொல்லும்பொழுது மாத்திரமே, உலகின் ஒளியான இயேசுவின் குணாதிசயங்களை நம்மில் ஜனங்கள் அறிந்து கொள்வார்கள். யூத ஜனங்களுக்கு ஆபத்து என்று அறிந்ததும் எஸ்தர் இராஜாத்தி நான் செத்தாலும் சாகிறேன் என்ற தீர்மானத்தோடு, உபவாசித்து, ராஜசமுகத்திலே சென்று ஜனங்களுக்காக வேண்டிக் கொண்டதினாலே யூத ஜனங்கள் காக்கப்பட்டனர். தேவன் எஸ்தரை யூத ஜனங்களுக்கு ஆறுதல் செய்கிறவளாக பயன்படுத்தினார்.

## 2. திவ்விய உண்மையோடு நடத்தல் :

"மாம்சத்திற்கேற்ற ஞானத்தோட நடவாமல் தேவனுடைய கிருபையினால் நாங்கள் உலகத்திலேயும், விசேஷமாக உங்களிடத்திலேயும், கபடமில்லாமல் திவ்விய உண்மையோடே நடந்தோமென்று, எங்கள் மனது எங்களுக்குச் சொல்லுஞ்சாட்சியே எங்கள் புகழ்ச்சியாயிருக்கிறது" (2 கொரி 1:12). தெய்வீக உண்மையோடு, பிறர் நம்மைக் காணும்பொழுது, நாம் வாழும் வாழ்க்கையானது பிறருக்கு வெளிச்சத்தைக் காட்டுகிறது. "உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களை பெறுவான்" (நீதி.28:20) என்கிற தெய்வீக உண்மையை நம் எண்ணத்திலும் வாழும் வாழ்க்கையிலும் கடைபிடிப்பது நமக்கு மிகப்பெரிய ஆசீர்வாதமாய் அமையும்.

வேதத்திலே, யோசியா ராஜாவாயிருந்தபோது, கர்த்தரின் ஆலயத்தைப் பழுதுபார்க்கிறதற்காக பணத்தை கர்த்தரின் ஆலயத்தின் வேலையை விசாரிக்கிறவர்கள் கையிலே கொடுத்து, அவர்கள் காரியத்தை உண்மையாய் நடப்பிக்கிறபடியினால், "அவர்களிடத்தில் அதின் கணக்கைக் கேட்கவேண்டியதில்லை" (2இராஜா.22:7) என்று கூறினான். ஆட்கள் அவ்வளவு உண்மையுடன் வேலை செய்தார்கள். ஒருவேளை நாம் நம்முடைய செயல்பாடுகளில் அநித்தியமான உலகக்காரியங்களில் உண்மையாயிராவிட்டால் யார் நம்மை நம்பிப் பரமகாரியத்தை ஒப்புவிப்பார்கள்? "உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும்" கூறக் கற்றுக் கொள்ளுங்கள். காலம் தவறாமையைக் கடைபிடிக்க அழைக்கப்படுகிறோம். ஆலயத்திலும், வீட்டிலும், வேலைஸ்தலத்திலும் நமக்கு குறிக்கப்பட்ட கடைமைகளை குறித்த நேரத்தில், அது சிறு கடைமையாக இருந்தாலும் மிக நேர்த்தியாய் நிறைவேற்றும்பொழுது,

**ஜெப விண்ணப்பங்களை அனுப்ப...**

**இம்மாத உபவாச ஜெபம் 31.10.2022 அன்று நமது அலுவலகத்தில் வைத்து நடைபெறும். தனிப்பட்ட ஜெபக்குறிப்புகளை அனுப்ப விரும்புகிறவர்கள் 9994040186 என்ற எண்ணிற்குத் தொடர்பு கொண்டு தெரிவிக்கவும். உங்களுக்காக விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கப்படும்.**

கொஞ்சத்தில் உண்மையாயிருக்கிறவர்களை அநேகத்தில் அதிகாரியாக வைக்க தேவன் சித்தம் கொள்கிறார். வாழ்வின் எல்லா சூழ்நிலைகளிலும் நாம் திவ்விய உண்மையோடு நடப்பதை மற்றவர்கள் பார்க்கும்பொழுது தேவனுடைய நாமம் மகிமைப்படும். தேவனுடைய மகிமையுள்ள பிரகாசம் அவர்கள் மீது படும். அப்பொழுது ஆண்டவரின் மீட்பைப் பெற வாஞ்சையுள்ளவர்களாக மாறுகிறார்கள்.

### 3. தேவனுக்கு நற்கந்தமாயிருத்தல் :

"எல்லா இடங்களிலேயும் எங்களைக் கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம். இரட சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும், கெட்டுப்போகிறவர்களுக்-குள்ளேயும், நாங்கள் தேவனுக்குக் கிறிஸதுவின் நற்கந்தமாயிருக்கிறோம்" (2 கொரி 2:14,15). தேவனுடைய வசனத்தை தேவன் அருளுகிற வண்ணமாய்ப் பேசும் போது அது தேவனுக்கு நற்கந்தமாய் இருக்கும். "அநேகரைப்போல, நாங்கள் தேவவசனத்தைக் கலப்பாய் பேசாமல், துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்ட பிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவ சந்நிதியில் பேசுகிறோம்" (2கொரி.2:17). கிறிஸ்துவுக்குள் தேவன் அருளிய வண்ணமாய்ப் பேசும்பொழுது தேவநாமம் மகிமைப்படும். ஒரே சுவிசேஷம் தான் தேவனால் அருளப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைய தலைமுறைகள் பல்வேறு வித்தியாசமான, பணம் சம்பாதிக்கும் எண்ணமுடையவர்களாய், பிரசங்கிக்கிறார்கள். இதன் முடிவு அழிவு. ஆனால் கிறிஸ்து திட்டமாய் போதித்த போதனைகள் வேதத்தில் தெளிவாய் சொல்லப்பட்டிருக்கிறது. அதை நாம் தெளிவாய்ப் புரிந்து கொண்டு மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லும் போது தேவநாமம் மகிமைப்படும். அதைக் கேட்கிறவர்கள் வேதவசனத்தைச் சார்ந்து கொண்டு கிறிஸ்துவண்டை வரும் போது மெய்யாய் நாம் தேவனுக்கு நற்கந்தமாய் வாழ்கிறோம் என அறிந்து கொள்ளலாம். "உன் உதடுகள் செம்மையானவைகளைப் பேசினால் என் உள்ளிந்திரியங்கள் மகிழும்" (நீதி.23:16) என்ற வேதவாக்கியத்தை நிறைவேற்றும் பாக்கியம் நமக்குக் கிடைக்கும்.

இவ்விதமாக கிறிஸ்துவுக்குள் வெளிச்சம் தந்து நம்மை சார்ந்து இருக்கிற மக்களுக்கும் வெளிச்சம் தந்துவிட ஜெபிப்போம். இந்த மேலான ஆசீர்வாதத்தை தேவன் நம் ஒவ்வொருக்கும் தந்தருளுவாவராக. ஆமென்.



பூர்கியில் ஞானஸ்நானம் பெற்ற 19 நபர்கள்

## இலவச மருத்துவ முகாம் - பிம்ரிகிராமம்

தேவனுடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமை உண்டாவதாக; மஹாராஷ்டிரா மாநிலத்தில் பிம்ரி கிராமத்தில் பெத்தேல் ஆலயத்தில் ஒரு இலவச மருத்துவ முகாம் ஏழை எளிய மக்களுக்காக நடத்தலாம் என ஒரு மாதத்திற்கு முன்பு திட்டமிடப்பட்டது. இதற்கான ஆயத்த பணிகளை மேற்கொண்டு வந்தோம். இதற்காக பல டாக்டர்களிடம் அணுகி பேசினோம். கடைசியாக நான்கு டாக்டர்கள் வருகிறோம் எனக் கூறினர். 11-09-2022 ஞாயிறு அன்று முகாமை நடத்தலாம் என முடிவு செய்து நோட்டிஸ் அடிக்கப்பட்டது, ஒவ்வொரு நாளும் இதற்காக ஜெபித்தோம், முயற்சிகளை எடுத்தோம். ஒவ்வொரு கிராமத்துக்கும் நோட்டிஸ் கொடுக்கப்பட்டது. 10-9-22 சனிக்கிழமை அன்று ஆயத்த பணிகளை செய்தோம். ஊரில் உள்ள பள்ளியிலிருந்து மேஜை, நாற்காலி, பெஞ்ச் வாங்கப்பட்டது. மருத்துவ உபகரணங்கள், மருந்துகள் ஒழுங்கு செய்யப்பட்டன. பிறகு பணிகளை முடித்து விட்டு ஜெபித்து சென்று விட்டோம்.

அடுத்த நாள் காலையில் காலை 5 மணி முதல் பலத்த மழை பெய்தது. ஓயாமல் பெய்து கொண்டே இருந்தது, மழையின் தாக்கத்தைப் பார்த்தபோது இந்த மழை நிற்காது என்பது போல் இருந்தது. சாலையில் எல்லாம் ஒரே வெள்ளக் காட்சியாக இருந்தது. எங்கள் மனதில் ஒரு கலக்கம், தயக்கம். முகாம் நடைபெறுமா? டாக்டர்கள் வருவார்களா? மக்கள் வருவார்களா? எங்களாலும் வீட்டை விட்டு வெளியே செல்ல முடியவில்லை. அவ்வளவு பெரிய மழை, பின்னர் நாங்கள் யோசித்தோம். பின்பு, சூழ்நிலையை பார்ப்பது விட தேவ சமூகத்தில் அமர்ந்து ஜெபிக்க முடிவு செய்தோம் விசுவாசத்தோடு, பாரத்தோடு ஜெபித்தோம்.

என்ன ஆச்சரியம்! நேரம் ஆக ஆக மழையின் தாக்கம் குறைந்து, சரியாக 10 மணிக்கு மழை நின்றது, வெயில் ஏற்பட்டது, குறித்த நேரத்தில் ஆலய ஆராதனை நடைபெற்றது. மக்களும் சரியாக வந்தனர். **Dr**.அஷிம் அவர்களும் சரியான நேரத்திற்கு வருகை தந்து, ஆலய ஆராதனையில் பங்கு கொண்டார். 11 மணிக்கு முகாம் நடைபெறத் துவங்கியது. பின்பு, மக்களுக்கு மருத்துவம் பார்க்கப்பட்டது. மக்களின் கூட்டம் வர வர அதிகரிக்கத் தொடங்கினது. சிறிது நேரத்திற்கு பின்பு சிறப்பு டாக்டர். வான்கடே **MD** அவர்களும் வருகை புரிந்து நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க ஆரம்பித்தார். நாங்கள் மொத்தம் 150 சீட்டுக்கள் தயார் பண்ணி இருந்தோம். போகப்போக அதுவும் காலியானது. பின்பு அவசரமாக 100 சீட்டு தயார் செய்தோம். மாலை 5 மணிக்கு மருத்துவ முகாம் இனிதே நிறைவடைந்தது.



பிம்ரியில் நடைபெற்ற மருத்துவ முகாமில்

டாக்டர்களுக்கு நன்றி செலுத்தி அனுப்பினோம். **Dr**. அஷிம் அவர்கள் உங்கள் ஆராதனை, உபசரிப்பு, ஆயத்தம், எல்லாம் நன்றாக இருந்தது என கூறினார். தேவ கிருபையால் கிட்டதட்ட 200க்கு மேற்பட்ட மக்கள் இந்த முகாமின் மூலம் பலன்களை பெற்றுக்கொண்டனர். இதன் மூலம் தேவ நாமம் மகிமைபட்டது. 6 மணிக்கு மேல் மழை பெய்ய ஆரம்பித்தது.

இந்தமுகாம் சிறந்த முறையில் நடைபெறச்செய்த தேவாதிதேவனுக்கு நன்றியைச் செலுத்துகிறோம். ஊதவி செய்த அனைத்து மக்களுக்கும் தேவனுடைய கிருபை உண்டாவதாக.

## பூர்கி - பிரபாகரன் காவ்டே (25) சாட்சி

பூர்கியைச் சேர்ந்த கோவாரி என்னும் மொழி பேசும் ஆதிவாசி பிரபாகரன் காவ்டே ஒரு நாள் சாயங்கால வேளையில் நமது ஊழியரின் வீட்டிற்கு வந்தார். தன்னுடைய இரண்டு மகள்களும் (5 வயது மற்றும் 3 வயது) அடிக்கடி பலவீனப்படுவதாகவும் மேலும் தன்னுடைய குடும்பத்தில் நிம்மதி இல்லாமல் தவிப்பதாகவும் கூறினார். பல்வேறு பூஜை செய்தும் பலி கொடுத்தும் மந்திரவாதம் பண்ணியும் சோர்ந்து போன இவர், இயேசுவைப் பின்பற்ற முடிவெடுத்து ஊழியரைத் தேடிவந்தார். நமது பூர்கி சபையில் அற்புதங்களை பெற்றுக்கொண்ட சில விசுவாசிகளின் சாட்சிகளைக் கேட்ட இவர் நானும் இயேசுவிடம் வந்து சுகம்பெற்றுக்கொள்வேன் என ஆர்வத்தோடு ஊழியர்களைத் தன்னுடைய வீட்டிற்கு அழைத்துச் சென்றார். இவருடைய குடும்பத்திற்காகவும் மகள்களின் பலவீனத்திற்காகவும் ஊழியர்கள் ஜெபித்தனர். அடுத்த நாள் காலையில் 3 வயது மகள் பலவீனத்திலிருந்து சுகம் பெற்று விளையாடுறாள், சாப்பிடுகிறாள் என்று சந்தோஷமாக சாட்சி கூறினார். மேலும் தன் வீட்டில் வைத்திருந்த அந்நிய தெய்வங்களையும் தாயத்துகளையும் ஒரு மூட்டை நிறைய சேர்த்து வெளியில் போட்டுவிடும்படி ஊழியர்களிடம் கொடுத்தார். தான் பெற்ற சுகத்தை என் இனமக்களுக்கும் அறிவிக்கவும் தயங்கமாட்டேன் என விசுவாசத்தில் உள்ளார். தொடர்ந்து இவர் இயேசுவில் பலப்படவும், பூரண விடுதலை, சுகம், சமாதானம் பெற்று இயேசுவின் ஆசீர்வாதங்களை அனுபவிக்கவும் ஜெபிப்போம்.

**வியாரா பகுதியில் நாம் கட்டிவருகிற ஆலயம் இம்மாதம் *19*ம் தேதியில் பிரதிஷ்டை செய்யப்படும். அதற்காக ஜெபித்த மற்றும் உதவிகள் செய்த அனைவருக்கும் நன்றிசொல்கிறோம். தேவன் உங்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.**

இந்த மிஷனெரி ஊழியங்களை காணிக்கைகளால் தாங்க விரும்புவோர் இங்கு குறிப்பிட்டுள்ள எங்கள் வங்கி கணக்கில் **ECS, NEFT, IMPS** மூலம் பணம் அனுப்பி உயதவலாம்.

**Canara bank,** Vannarpettai Branch, Tirunelveli
A/c Name : **Western India Mission**
A/c No : **2952101007959**
IFSC Code : **CNRB0002952**



**Axis Bank,** KTC Nagar, Branch, Tirunelveli
A/c Name : **Western India Mission**
A/c No : **922010016879568**
IFSC Code : **UTIB0003601**

(பணம் அனுப்பப்பட்ட விபரத்தையும், **M.O** மூலம் பணம் அனுப்பி ஊழியங்களுக்கு உதவி செய்வோரும் **9944306154** என்ற செல்போனுக்கு **SMS** மூலம் தெரியப்படுத்தினால் உங்களுக்கு ஒப்புகை ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்)

## ஜெபவிண்ணப்பங்கள்

- பிம்ரி பகுதியைச் சார்ந்த சக்குல்னா என்ற வாலிப சகோதரி ஜெபத்திற்கு ஆர்வம் காட்டி வருகின்றாள். முழுவதுமாக தேவனிடத்திற்கு வர ஜெபிப்போம்.
- பாந்தர்கவ்டா பகுதியை சேர்ந்த பிக்ஸா(18) என்ற வாலிப சகோதரியின் தாயாரின் சுகத்திற்காக ஜெபிப்போம்.
- கயர்காவ் பகுதியைச் சேர்ந்த சோம் பாயி(52) மூல வியாதி நீங்கி குணமடைய ஜெபிப்போம்.
- சாயகேடா பகுதியைச் சேர்ந்த வியாஸ் என்பவர் குடிப்பழக்கத்தை விட்டுவிட ஜெபிப்போம்.
- (1 வருடமாக அதிகமாக வலித்து கொண்டே இருக்கும்) சுன்னா பகுதியைச் சேர்ந்த மம்தாவின் கை சுகத்திற்காக ஜெபிப்போம்.
- பிம்ரி புதிய விசுவாசிகள் லட்சுமிபாய், கஜனக் தேவனிடம் முழுவதுமாக விசுவாசம் வைக்கவும், பின்னடைந்த சுஷ்மா பாயி, சாலிக், தினேஷ், கங்கா, சந்தோஷ் ஆகியோருக்காக பாரத்தோடு ஜெபிப்போம்.
- பிம்ரி பகுதியில் விக்கிரக ஆராதனை அதிகமாகி வருகிறது. மேலும் மகாராஷ்டிரா மாநிலத்தில் கணபதி பூஜை திருவிழாவை தொடர்ந்து 10நாட்கள் பெரிதாகக் கொண்டாடுவார்கள். சத்துருவின் தந்திரங்கள், போராட்டங்கள் முறிக்கப்பட்ட இருளில் இருக்கிற ஜனங்கள் வெளிச்சத்திற்கு வர ஜெபிப்போம்.
- மர்கல் கிராமத்தைச் சேர்ந்த மைனு காவ்டே (35) குடிப்பழக்கம் உடையவர், குடித்தால் பைத்தியமாக மாறிவிடுகிறார். கழுத்துப்பகுதியில் சிலர் தாக்கியதால் இவருடைய நரம்பு பாதிக்கப்பட்டு, வலியால் அவதிப்படுகிறார். மேலும், இவர் தற்போது பூர்கியில் நமது ஊழியர் வீட்டில் உள்ளார். இவர் மனம்திரும்ப, சுகம்பெற ஜெபிப்போம்.
- சந்தோஷ் காவ்டே(30) - மர்கல் கிராமத்தைச் சேர்ந்தவர். நுரையீரல் பகுதியில் பாதிக்கப்பட்டு 1 மாதமாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்றும் பரிபூரண சுகம் பெறவில்லை. அவ்வப்போது வலியால் அவதிப்படுகிறார். இவருக்கு சுவிஷேசம் அறிவித்திருக்கிறோம். தேவன் இவரை இரட்சிக்க நாம் ஜெபிப்போம்.
- பூர்கியில் வினோஜ் உசேண்டி (28) கழுத்துப் பகுதியில் வீக்கமடைந்து கட்டி போல் இருந்தது. உடைந்து புண்ணாக உள்ளது. மருத்துவர்கள் வுடீ - ஆல் பாதிக்கப்பட்டு இருப்பதாக கூறினர். ஆனால், இந்த நோயைக் குறித்து எந்த ஒரு அறிவும், உணர்வும், கவனமும் இவரிடம் இல்லை. அடிக்கடி பைத்தியமாகவும் மாறி வீட்டை விட்டு வெளியேறி செல்கிறார். இயேசுவைப்பற்றி கூறியிருக்கிறோம். இவருக்காக ஊக்கமாய் ஜெபிப்போம்.
- பூர்கியில் நமது சபையைச் சார்ந்த, சரிதா கிரங்கா (26), உணவுக்குழல் சுருங்கியிருப்பதால் சாப்பிட முடியாமல் அவதிப்படுகிறார். ஸ்கிளிரோடெர்மா என்றும் ஒரு விதமான தோல் வியாதியால் பாதிக்கப்பட்டு இருக்கிறார். சிகிச்சையும் இவர் எடுத்துவருகிறார். இந்தப் பெண் கணவனால் கைவிடப்பட்டவர். சுகம்பெற ஜெபிப்போம்.

அன்பரின் பணியில்,

**Dr.G. ஜெயக்குமார் மற்றும் ஊழியர்கள்**


உங்கள் ஜெப தேவைகளுக்கும் மேற்கு இந்திய பகுதிகளில் நடைபெறும் மிஷனெரி ஊழிய விபரங்களை அறிந்து கொள்ளவும் நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய எங்கள் மொபைல் எண்கள் மற்றும் முகவரி:

| | | | |
|---|---|---|---|
| **Dr.** ஜெயக்குமார் | 9894075795 | சகோ. தங்கராஜ் | 9944306154 |
| சகோ. செல்வக்குமார் | 9994040186 | சகோ. ∴பெலிக்ஸ் | 9600992654 |
| சகோ. கோயில்பிள்ளை | 9159827209 | | |

**Our Address :**

**Western India Mission,**

**சி-98, கிழக்கு ரஹ்மத் நகர், திருநெல்வேலி 627 011.**

இணையதள முகவரி : https://westernindiamission.com



*DIOCESAN OFFSET PRESS, PALAI - PH : 0462 - 2573182*